பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 09 வள்ளுவர் ஆண்டு 2056 ஆடி05 திங்கட்கிழமை 21.07.2025 கதிர் 254

## இது ரகசியம் அல்ல!

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமாரைப் பார்ப்பதற்குப் பரிதாபமாக உள்ளது. கடந்த இரண்டு நாள்களாக (சனி, ஞாயிறு) ☞2

# பாடசாலைக் கட்டமைப்பையே சீரழிக்கிறது கல்விச் சீர்திருத்தம்

## எதிர்க் கட்சித் தலைவர் காட்டம்

பாடசாலை கட்டமைப்பையே அழிக்கும் கல்விச் சீர்திருத்தங்களையே தற்போதைய ஆளும்தரப்பு முன்னெடுத்து வருகிறது. இந்த நாசகார கொள்கைகளுக்கு எதிராக நாம் முன்நிற்போம். இதற்காக நாம் அஞ்சப்போவதில்லை. இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவம் வழங்கும் மக்களுக்காக நாம் முன்நிற்போம். மக்களுக்காக எம்மால் இயன்றவரைப் போராடி எமது உச்சக்கட்ட கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றுவோம் என எதிர்க்கட்சித்தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

அநுராதபுரம் தம்புத்தேகம நகரில் நேற்றுமுன்தினம் (19) நடைபெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் உரையாற்றிய எதிர்க்கட்சி தலைவர்

தற்போதைய ஜே.வி.பி ஆளும்தரப்பு விவசாயிகளைப் பாதுகாப்போம் நாட்டைக் கட்டியெழுப்புவோம் என வாக்குறுதி வழங்கியிருந்த போதிலும் இன்று நாடு சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளுக்கு அடிபணிந்து பொம்மை அரசாங்கமாகவே இருந்து வருகின்றது. மக்களின்வாழ்க்கையைஅழித்துஅவர்களை படுகுழியின் பால் இழுத்துச் செல்லும் இந்த மக்கள் விரோத செயல்களை ☞2

## கடலுக்குச் செல்வதை தவிர்க்கக் கோரிக்கை

கடல் பிராந்தியங்களில் நிலவிவரும் மோசமான காலநிலையைக் கருத்தில் கொண்டு, கடற்தொழிலுக்குச் செல்வதை முற்றிலுமாகத் தவிர்க்குமாறு கடற்றொழில் மற்றும் நீரியல் வள திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் சுசந்த கஹவத்த அனைத்து கடற்றொழில் சமூகத்தினரிடமும் கேட்டுக்கொண்டுள்ளார்.

வளிமண்டலவியல் திணைக்களத்தின் சமீபத்திய அறிக்கையின்படி, புத்தளத்திலிருந்து பொத்துவில் வரையான கொழும்பு, காலி மற்றும் ஹம்பாந்தோட்டை ஊடான கடல் பிராந்தியங்களில் காற்றின் வேகம் ☞2

## நாளை முதல் 4 நாள்கள் கூடுகிறது நாடாளுமன்றம்

நாடாளுமன்றம் நாளை 22 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரை கூடுவதற்கு தீர்மானிக்கப்பட்டிருப்பதாகப் நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்தார். சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் கடந்த வாரம் கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுவில் இந்த தீர்மானம் எடுக்கப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இதற்கமைய நாடாளுமன்றம் கூடும் ஒவ்வொரு நாளும் காலை 9.30 மணி முதல் 10.00 மணிவரை நிலையியற் கட்டளை 22 இல் குறிப்பிடப்பட்டுள்ள 1 முதல் 6 வரையான நாடாளுமன்ற அலுவல்களுக்கு நேரம் ☞3

## 4,700 மலையக மக்களுக்கான வீட்டுத் திட்டம் அடுத்த மாதம்

### தொடங்கும் என்கிறார் அமைச்சர் சமந்த

மலையகமக்களில்வீடுவசதியற்றநான்காயிரத்து 700 குடும்பங்களுக்கு வீடு கட்டிக்கொடுக்க ஆளும்தரப்பு நடவடிக்கை எடுத்துள்ளது. இந்திய அரசின் உதவியுடன் நிர்மாணிக்க இருக்கும் இந்த விட்டுத்திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக்கப்படும் என பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

பெருந்தோட்ட அமைச்சில் நேற்று செய்தியாளர்களிடம் பேசும்போது இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

மலையக பெருந்தோட்ட மக்கள் கடந்த 200 வருடங்களாக எதிர்கொண்டு வரும் அடிப்படை பிரச்சினைகளுக்கு தீர்வு ☞2

## இரு குழுக்களிடையே நேற்று வட்டுக்கோட்டையில் மோதல்

### பொலிஸார் குவிக்கப்பட்டு துப்பாக்கிச் சூடு இரவு அதிரடிப் படையும் மேலதிக பாதுகாப்பு

வட்டுக்கோட்டை மூளாய் பகுதியில் நேற்று இரண்டு குழுக்களுக்கு இடையே மோதல் ஏற்பட்டது. இதனால் அந்தப் பகுதியில் பெரும் பதற்றம் உருவாகியது. மோதலில் மோட்டார் சைக்கிள் தீக்கிரையாக்கப்பட்டது. மற்றொரு மோட்டார் சைக்கிள் அடித்துச் சேதமாக்கப்பட்டது. ☞3

## ஆடை, இறப்பர் தொழில்கள் வீழாமல் ஆளும்தரப்பு காக்கும்

### அமைச்சர் வித்தியாரத்ன தெரிவிப்பு

அமெரிக்காவின் தீர்வை வரி அதிகரிப்பால் ஆடை மற்றும் இறப்பர் தொழிற்சாலைகள் வீழ்ச்சியடையாமல் பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை ஆளும்தரப்பு எடுக்கும் என பெருந்தோட்ட மற்றும் உட்கட்டமைப்பு வசதிகள் அமைச்சர் சமந்த வித்தியாரத்ன தெரிவித்தார்.

பெருந்தோட்ட அமைச்சில் நேற்று செய்தியாளர்களிடம் இதனைத் தெரிவித்தார். அவர் அங்கு தொடர்ந்து தெரிவித்ததாவது:

அமெரிக்காவின் வரி அதிகரிப்பால் அமெரிக்காவுக்கு பிரதானமாக ஏற்றுமதி செய்யும் ஆடை மற்றும் இறப்பர் உற்பத்திகளுக்கு ஓரளவேனும் பாதிப்பு ஏற்படும் என நாங்கள் நம்புகிறோம். என்றாலும் ஏற்கனவே ☞3

## ஒருவர் குத்திக்கொலை

வத்தளைஹேக்கித்தபகுதியில்நேற்றுமுன்தினம் இரவு கூரிய ஆயுதத்தால் தாக்கி ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்தபகுதியில்உள்ளஇரண்டுமாடிவீடொன்றில் இருந்த நபர் ஒருவரை முச்சக்கரவண்டியில் வருகை தந்த அடையாளம் தெரியாத கும்பல் ஒன்று கூரிய ஆயுதத்தால் தாக்கி கொலை ☞2

## சம்பூர் கடற்கரையோரமும் கிளம்பின மனித எச்சங்கள்

### கண்ணிவெடி அகழ குழி தோண்டியபோது சம்பவம்

திருகோணமலை, சம்பூர் கடற்கரை ஓரமாக நிலக்கீழ் கண்ணிவெடி அகழும் பணியில் ஈடுபட்டுக்கொண்டிருந்தபோது மனித எச்சங்கள் வெளிவந்ததை ☞2

## ஊழல் குற்றச்சாட்டுக்களை அனைவர் மீதும் குத்தத் தொடங்கிவிட்ட என்பிபி ஆளும்தரப்பு

### முஜிபுர் ரஹ்மான் எம்.பி. குற்றச்சாட்டு

ஆட்சிக்கு வந்து 9 மாதங்களுக்குள் ஆளும்தரப்பின் பார்வை மாறியுள்ளது ஊழல் குற்றச்சாட்டுகளை அனைவர் மீதும் முத்திரை குத்த ஆரம்பித்துள்ளனர் என்று ஐக்கிய தேசிய கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ☞2

# சர்வதேச குற்றவியல் விசாரணையை வலியுறுத்தி ஐ.நா. மனித உரிமைகள் பேரவைக்கு மீளக் கடிதம்

## சில தமிழ் கட்சிகள் மற்றும் சில அமைப்புகள் கூடித் தீர்மானம்

தமிழ் மக்கள் மீது நிகழ்த்தப்பட்ட போர்க் குற்றங்கள், மனித குலத்திற்கு எதிரான குற்றங்கள், இனப்படுகொலை என்பவற்றுக்கு நீதிவழங்கும் முகமாக இலங்கையை சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு உட்படுத்தவேண்டும் என்பதுள்ளிட்ட சர்வதேச பொறுப்புக்கூறலை வலியுறுத்தி மீண்டும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவைக்கு கடிதமொன்றை அனுப்புவதற்கு ஏகமனதாக தீர்மானம் எடு க்கப்பட்டுள்ளது.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஏற்பாட்டில் இலங்கை ஆளும்தரப்பால் தமிழ் மக்கள்மீது அரங்கேற்றப்பட்ட மனிதகுலத்துக்கு எதிரான குற்றங்கள் போர்குற்றங்கள் மற்றும் இனவழிப்பு குற்றங்கள் தொடர்பிலான பொறுப்புக்கூறல் தொடர்பில் தமிழ்த் தேசிய நிலைப்பாட்டில் உள்ள அரசியல் கட்சிகள் மற்றும் பாதிக்கப்பட்ட உறவுகளின் பிரதிநிதிகள், சில சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் பங்கேற்ற சந்திப்பொன்று நேற்றுக் காலை 10.30 மணிக்கு யாழ். ரில்கோ விடுதியில் நடைபெற்றிருந்தது.

இந்தக் கூட்டத்தில் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி தலைமையிலான தமிழ்த் தேசியப் பேரவையினர், ஜனநாயக தமிழ்த் தேசியக் கூட்டணியின் பிரதிநிதிகள், மதத் தலைவர்கள், சிவில் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் வலிந்து காணாமலாக்கப்பட்டவர்களின் ☞3

காலைக்கதிர் Kalaikkathir

## இனி இது .....

அவர் நடத்திய செய்தியாளர்கள் மாநாட்டில் அவர் தனது கட்சி, கூட்டணி மற்றும் அரசியல் பற்றிப் பேசியதைவிட தமிழ் அரசுக் கட்சியைப் பற்றியே பேசிக்கொண்டிருக்கிறார். அதுவும் மிக நீண்ட நேரம் எதேதோ உளறிக்கொட்டிக் கொண்டே இருக்கிறார். தமிழ் அரசுக் கட்சி தமிழ் அரசுக் கட்சி என்பதையே ஒரு மந்திர உச்சாடனம் போன்று திரும்பத் திரும்பச் சொல்லிக் கொண்டிருக்கிறார். தமிழ் அரசுக் கட்சியை விட்டுவிட்டால் தானும் தனது கூட்டணியும் செய்வதற்கு அரசியல் என்ற ஒன்று இல்லை என்று நினைத்துவிட்டரோ என்னவோ தெரியவில்லை.

அதுவும்போக அவர் அடுத்த மாவை சேனாதிராசாவாக உருவெடுத்துவிட்டார் என்று அலுத்துக்கொள்கிறார்கள் செய்தியாளர்கள். அவரது செய்தியாளர் சந்திப்புக்கள் இப்போதெல்லாம் நீட்டி முழக்கி, சொன்னதையே திரும்பத் திரும்பச் சொல்லி, சம்பந்த சம்பந்தமில்லாத விடயங்களை ஒன்றோடு ஒன்று கோர்த்து மிக நீண்ட நேரத்தை அவர் விழுங்கி விடுகின்றார் என்பதே அவர்களது சலிப்புக்குக் காரணம். கடைசியில் அவர் என்ன சொல்ல வந்தார், அதாவது அவரது செய்தியாளர் சந்திப்பின் அடிநாதம், அடிப்படை விடயம் என்ன என்பதே செய்தியாளர்களுக்குப் புரியாத நிலையில்தான் அவர்கள் கலைந்து செல்கிறார்கள்.

செய்தியாளர்களின் சலிப்புக்கு ஒரு சிறந்த உதாரணம் அண்மையில் நடந்த சம்பவம். கஜேந்திரகுமார் செய்தியாளர்கள் சந்திப்பில் -சுமார் 45 நிமிடங்கள் நீட்டி முழக்கினார். முடிந்ததும் செய்தியாளர்கள் அவர் இவ்வளவு நேரமும் கூறிய விடயங்களின் சாராம்சத்தை இரத்தினச் சுருக்கமாக இரண்டே நிமிடங்களில் கூறும்படி அவரிடம் கேட்டார்கள். தொலைக்காட்சி அலைவரிசைகளில் செய்தி நேரத்தில் ஆகக்கூடுதலாக இரண்டு நிமிடங்களுக்கு மேல் ஒரு செய்திக்கு நேரம் ஒதுக்க மாட்டார்கள் என்பதால் சுருக்கமாகக் கூறும்படி கேட்டிருந்தார்கள். அதற்கே 11 நிமிடங்கள் அவர் மீண்டும் பேசினார் என்கிறார்கள் செய்தியாளர்கள். அதாவது 2 நிமிடங்கள் இரத்தினச் சுருக்கம் கேட்டதற்கு 11 நிமிட உரையை ஆற்றினார் கஜேந்திரகுமார். அதனால் இதற்கு மேலும் அவரிடம் கேள்விகள் எதுவும் கேட்டால் அதற்கு அடுத்த மூன்று மணி நேரத்தை எடுத்துக்கொள்வார் என்கிற பயத்தில் தாங்கள் கேள்வியே கேட்காமல் எழுந்து வந்துவிட்டோம் என்றார்கள் செய்தியாளர்கள்.

முன்னர் எல்லாம் தமிழ் அரசுக் கட்சியின் தலைவரும் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினருமான மாவை சேனாதிராசாவின் மீதுதான் இத்தகைய குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது வழமை. அவர் மைக்கைப் பிடித்தால் கீழே வைக்கமாட்டார், கடைசியில் அவர் என்ன பேசினார் என்று கேட்டால் எதுவும் யாருக்கும் புரிந்திருக்காது என்று சொல்வார்கள். அதிலும் அவர் தான் இளமையில் சிறைக்குப் போனதிலிருந்து கடைசியாக சம்பந்தன் ஐயா வீட்டிற்குப் போனது வரைக்கும் நீட்டி முழக்கியிருப்பார் ஆனால் பயன் எதுவும் இருந்திருக்காது. இப்போது அந்த இடத்தை நிரப்ப கஜேந்திரகுமார் வந்திருக்கிறார் போலத் தெரிகிறது.

என்ன சொன்னாலும் மாவையர் தன்னைப் பற்றியும் தனது கட்சியைப் பற்றியும் தமது அரசியலைப் பற்றியும்தான் பேசிப் பேசி அறுப்பார். கஜேந்திரகுமாரோ தொடக்கம் முதலே தமிழ் அரசுக் கட்சி, தமிழ் அரசுக் கட்சி என்றே எல்லோரையும் அறுக்கத் தொடங்கியிருக்கிறார் என்பதை கடந்த இரண்டு நாள்களும் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்புக் காணொளிகளைப் பார்த்தால் தெரியும்.

நேற்று அவர் நடத்திய சந்திப்பில், அவர் அண்மையில் சேர்ந்த கூட்டுக்குள் இணைந்திருக்கும் இரு தரப்பினரைப் பற்றிய கேள்விக்கு பதிலளிக்க முடியாமல் அவர் திணறியதைப் பார்க்கும்போது, ஆப்பிழுத்த குரங்கின் கதைதான் ஞாபகத்திற்கு வந்தது. முதல் கேள்வி, சந்திரகுமாரை உங்கள் கூட்டில் சேர்த்த நீங்கள் டக்ளஸையும் அதுபோன்று எதிர்காலத்தில் சேர்த்துக்கொள்வீர்களா என்பது. அதற்கு நேரடியாகப் பதில் சொல்லாமல் சுற்றிவளைத்து, மூக்கைத் தொடும் வகையில் பதில் சொன்னார். நாங்கள் ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியோடுதான் ஒப்பந்தம் செய்தோம், அந்தக் கூட்டில் இருக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனை எமக்குத் தேவை என்பதால் அவர் இருக்கும் கூட்டணியோடு ஒப்பந்தம் செய்தோம், அந்தக் கூட்டணிக்குள் சந்திரகுமார் இருக்கிறார் என்று பூசி மெழுகினார். அதுமட்டுமல்லாமல் சந்திரகுமார் ஈபிடிபியை விட்டு வெளியே வந்துவிட்டார், முன்னணியின் கொள்கையை ஏற்றுக்கொண்டார் என்றெல்லாம் எதேதோ சமாளித்தார். அப்படியென்றால், டக் ளஸும் ஈபிடிபியை விட்டுவிட்டு வந்தால் ஏற்பீர்களா என்று செய்தியாளர்கள் மடக்கியதும் அதற்குப் பதில் சொல்ல முடியாமல், இந்தக் கேள்வியை ஏன் எங்களிடம் கேட்கிறீர்கள், நாங்களா ஈபிடிபியிடம் ஆதரவு கேட்டுப் போனோம் என்று ஏதேதோ எல்லாம் சம்பந்தமில்லாமல் பதிலளித்தார். அதில் ஒரு செய்தியாளர் துணிச்சலாக அவரது முகத்துக்கு நேராகவே நீங்கள் என்னதான் சொல்லிச் சமாளித்தாலும் முன்னுக்குப் பின் முரணாகவே நடந்துகொள்கிறீர்கள் என்று சொல்லியும் விட்டார்.

அடுத்த கேள்வி, ஜனநாயகக் கூட்டணியுடன் கஜேந்திரகுமார் தலைமையிலான தமிழ் மக்கள் பேரவை செய்துகொண்ட ஒப்பந்தத்தில் 13ஆவது திருத்தச் சட்டம் தமிழ் மக்களின் பிரச்சினைக்கு நிலையானதோ இறுதியானதோ தீர்வு அல்ல என்று குறிப்பிட்டிருக்கையில், இந்தியாவில் இருந்து வந்திருக்கும் வடக்கு கிழக்கு முன்னாள் முதலமைச்சர் வரதராஜப் பெருமாள் 13ஐ ஏற்று அதனைப் பலப்படுத்துவது என்ற நோக்கத்தோடு சுரேஸ் பிரேமச்சந்திரனைச் சந்தித்தது குறித்தும் செய்தியாளர்கள் அவரிடம் கேள்வி கேட்டார்கள். அதற்கும் பதிலளிக்க முடியாத அவர், ஒப்பந்தத்திற்கு நேர்மையாக அவர்கள் நடப்பார்கள் என்று எதிர்பார்க்கின்றோம் என்று கூறி நழுவினார்.

பாவம் தமிழ் அரசுக் கட்சியின் மக்கள் ஆதரவைப் பார்த்து, அதிலிருந்து பிரிந்து சென்றவர்களுடன் சேர்ந்து ஒரு கூட்டை அமைத்து ஒருவாறு நிமிர்ந்துவிடலாமா என்று அவர் முயற்சிக்கும்போது, இப்படி நெத்திமுட்ட அவரிடம் கேள்வியைக் கேட்டு செய்தியாளர்கள் அவரை அம்பலப்படுத்திவிட்டால் அவரும் பாவம் என்னதான் செய்வது. அதனால்தான் செய்தியாளர்கள் கேள்வியே கேட்க முடியாத அளவிற்கு அவர்களைச் சலிப்படைய வைக்கும்வரை அவர் தொடர்ந்து உரையாற்றிக்கொண்டே இருக்கிறார் போலும்..

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பாடசாலைக்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாம் எதிர்ப்போம். மக்களுக்காக என்னால் இயன்றவரைப் போராடி எனது உச்சக்கட்ட கடமையையும் பொறுப்பையும் நிறைவேற்றுவேன்.

நாட்டில் எங்குமே பிரச்சினைகள் காணப்படுகின்றன. 323 கொள்கலன்களை சட்டவிரோதமாக விடுவித்து விட்டுஇ இப்போது நாட்டிற்கு பொய்யையும் பொய்யான பன பிரசங்கத்தையும் சொல்லி வருகின்றனர். பாடசாலை கட்டமைப்பையே அழிக்கும் கல்விச் சீர்திருத்தங்களைக்கூட இவர்கள் முன்னெடுத்து வருகின்றனர். இந்த நாசகார கொள்கைகளுக்கு எதிராக நாம் முன்நிற்போம். இதற்கு ஐக்கிய மக்கள் சக்தி தலைமைத்துவம் வழங்கும் மக்களுக்காக நாம் முன்நிற்போம் என்றார்.

## ஊழல்.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முஜிபுர் ரஹ்மான் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சி அலுவலகத்தில் நேற்று செய்தியாளர்களிடம் அவர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமைத்துவ மாற்றம் தொடர்பில் எவ்விதத் தீர்மானமும் மேற்கொள்ளப்படவில்லை. எமது தலைமைத்துவத்தை வலுவிழக்கச் செய்ய ஒரு சில சக்திகள் வெளியிலிருந்து செயல்படுவதை காணக்கூடியதாக உள்ளது. கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் தோல்வி அடைந்த அரசியல்வாதிகளே கட்சியின் தலைமைத்துவத்தைத் தாக்கும் வகையில் செய்யப்பட்டு வருகின்றனர். கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அமைச்சராக இருந்த காலப் பகுதியில் அவரது அமைச்சின் கீழ் இடம்பெற்ற ஊழல் மோசடிகள் தொடர்பாக விசாரணை செய்வதற்கு புதிய குழு ஒன்றை நியமிக்க அமைச்சரவையால் தீர்மானிக்கப்பட்டுள்ளதாக தெரியவந்துள்ளது.

முன்னாள் ஜனாதிபதி கோத்தாபாய ராஜபக்ச காலத்தில், இவ்விடயம் தொடர்பில் விசாரணை மேற்கொள்ள குழு நியமிக்கப்பட்டு விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன. எனினும் இறுதியில் சமர்பிக்கப்பட்ட விசாரணை அறிக்கையினபடி ஐக்கிய தேசிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாசவின் காலத்து ஊழல் மோசடிகள் இடம்பெறவில்லையென தெள்ளத் தெளிவாக நிரூபனமாகியுள்ளது. தேசிய மக்கள் சக்தியின் ஆளும்தரப்பு ஆட்சிக்கு வந்த வேகத்தில் வீழ்ச்சியை நோக்கி செல்கிறது. ஜனாதிபதி தேர்தலில் வெற்றிபெற்று, நாடாளுமன்றத் தேர்தலில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை பெற்ற ஆளும்தரப்பு, ஆறு மாதங்களின் பின்னர் இடம்பெற்ற உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் பெரும்பான்மையான வாக்குகளை இழந்துள்ளது. ஆளும்தரப்பின் வாக்கு வாங்கி சரிந்துள்ளமையை அவதானிக்கக்கூடியதாக உள்ளது.

ஆளும்தரப்பிற்கு வாக்களித்த பொதுமக்கள், அவர்களின் முறையற்ற தீர்மானங்களால் விரக்தி அடைந்துள்ளனர். அத்தீர்மானங்களால் நாட்டில் பல நெருக்கடிகள் உருவாகியுள்ளன. கடந்த ஆளும்தரப்பின் ஆட்சியில் வெளிப்படைத் தன்மையை இல்லை எனக்கூறிய தரப்பினரின் ஆளும்தரப்பு தற்போது வெளிப்படைத் தன்மையின்றி செயற்படுகிறது. குறிப்பாக ஜனாதிபதி ஊடகப் பிரிவில் பணியாற்றும் ஊழியர்கள் தொடர்பான விபரங்களை தகவல் அறியும் சட்டத்தின் மூலம் கோரிய போது அவற்றை வெளியிட முடியாது என தெரிவித்தனர். எவ்வாறெனினும் எமக்கு அறியக்கிடைத்த தகவலுக்கமைய சுமார் 90 பேர் ஜனாதிபதி ஊடகப் பிரிவில் பணியாற்றுகின்றனர்.

இதனாலேயே தகவல்களை வெளியிட மறுப்பு தெரிவித்திருக்கின்றனர். முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க ஆட்சியில் இருந்தபோதும் இத்தகவல்கள் வெளியிடப்பட்டன. ஏனைய தரப்பினர்களுடன் ஒப்பிடும்போது வெளிப்படைத் தன்மை, புதிய அரசியல் கலாசாரம் மற்றும் சமத்துவம் தொடர்பாக பேசியவர்களே இவ்வாறு செயற்படுகின்றனர். ஒன்பது மதங்களுக்கிடையில் ஆளும்தரப்பின் பார்வை மாறியுள்ளது ஊழல் குற்றச்சாட்டுகளை அனைவர் மீதும் முத்திரை குத்த ஆரம்பித்துள்ளனர் என்றா

## 4,700 மலையக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பெற்றுக்கொடுப்பதாக ஜனாதிபதி அநுரகுமார திசநாயக்க ஹட்டன் பிரகடனத்தின்போது தெரிவித்திருந்தார். குறிப்பாக அந்த மக்களுக்கு என தனியான வீடு, காணி, முகவரி இல்லாத குறைபாட்டுக்கு எமது அரசாங்க காலத்தில் தீர்வுகாண நடவடிக்கை எடுத்திருக்கிறோம். அதன் பிரகாரம் இந்திய அரசாங்கத்தின் உதவியுடன் 4700 குடும்பங்களுக்கு பூரண வீட்டுடன் காணி உரிமை வழங்க திட்டமிட்டிருக்கிறோம்.

இதற்காக இந்தியாவினால் ஒருவீட்டுக்கு 28 இலட்சம் ரூபா நன்கொடையாக கிடைக்கிறது. அதற்கு மேலதிகமாக அந்த வீட்டுக்கான அடிப்படை வசதிகளை செய்துகொடுக்க இலங்கை மக்களின் வரி பணத்தில் 4 இலட்சம் ரூபா நாங்கள் சேர்க்கிறோம். அதன் பிரகாரம் ஒரு வீட்டுக்கு 32 இலட்சம் ரூபா நாங்கள் ஒதுக்குகிறோம். அத்துடன் 10பேச் காணி வழங்குகிறோம்.

இதற்கு முன்னர் மலையகத்தில் வீடுகளை வழங்கும்போது அரசியல் தலையீடுகளுடன், அவர்களுக்கு நெருக்கமானவர்களுக்கே வழங்கப்பட்டன, அதனால் வீடு தேவையுடைய பலருக்கும் வீடுகள் கிடைக்கவில்லை. அதனால் தற்போது அமைக்கப்படும் 4700 வீடுகளை, பிரதேச ஒருங்கிணைப்புகுழுக்களில் இதற்கான அனுமதியை பெற்றுக்கொண்டு, தகுதியுடைய குடும்பங்கள் தெரிவு செய்யப்படுவார்கள். அதேநேரம் இந்த வீடுகளை வழங்குவதில், மணிசரிவு இடம்பெறும் அபாயமுல்ல லயன்களில் வாழ்பவர்களை அதில் இருந்து நீக்கி, அவர்களுக்கு முன்னுரிமை வழங்க திட்டமிட்டிருக்கிறோம். அடுத்த மாதம் இந்த வீட்டுத்திட்டத்தை ஆரம்பிக்க இருக்கிறோம்.

மேலும் 2023இல் கபரலிய பிரதேசத்தில் இடம்பெற்ற மணிசரிவில் பாதிக்கப்பட்ட மக்களை தற்காலிகமாக அங்கிருந்த மூடப்பட்டிருந்த தேயிலை தொழிற்சாலை ஒன்றில் தங்க வைக்கப்பட்டனர். அந்த மக்கள் இன்னும் அந்த தொழிற்சாலையிலேயே வாழ்ந்து வருகின்றனர். அதனால் அவர்களை மீள்குடியேற்ற வீட்டுத்திட்டம் ஒன்றை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம். இதுவரை 50 வீடுகளை அவசரமாக கட்டி முடித்திருக்கிறோம். இராணுவத்தினரே அங்கு பணியாற்றி வருகின்றனர். செப்டம்பர் மாதமளவில் அந்த வீடுகளை மக்களுக்கு கையளிக்க எதிர்பார்க்கிறோம் என்றார்.

## சம்பூர்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அடுத்து குறித்த கண்ணிவெடி அகழும் பணி இடைநிறுத்தப்பட்டுள்ளதாக தெரிய வருகின்றது.

ஜூலை 17 மூதூர் - சம்பூர் கடற்கரையோர பகுதியில் நிலக்கீழ் கண்ணிவெடி அகழும் பணி ஆரம்பிக்கப்பட்டிருந்தது. சம்பூர் சிறுவர் பூங்காவை அண்மித்துள்ள கடற்கரையோர பகுதியில் கடந்த ஒரு வாரகாலமாக எம்.ஏ.ஜி. எனப்படுகின்ற கண்ணிவெடி அகழும் நிறுவனம் தங்களுக்குரிய தளபாடம் மற்றும் பொருட்களுடன் முகாமிட்டு இந்தப் பணியில் ஈடுபட்டிருந்தது.

இந்த நிலையிலேயே நேற்றுக் குறித்த பகுதியில் மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டன. அதனை அடுத்து நீதிமன்ற கட்டளையை பெறுவதற்காக குறித்த பணி நிறுத்தப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சம்பூர் படுகொலையின் நினைவாக அமைக்கப்பட்ட தூபியை அண்மித்த பகுதியில் அகழ்வுப் பணி மேற்கொண்ட போதே மனித எச்சங்கள் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

## கடலுக்குச்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மணிக்கு 60-70 கிலோ மீட்டர் வரை அதிகரிக்கக்கூடும் எனவும், கடல் அலைகள் 2.5 முதல் 3 மீற்றர் வரை உயரக்கூடும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நேற்று ஞாயிற்றுக்கிழமை கடல் பிராந்தியங்களில் நிலவிவரும் காலநிலைத் தொடர்பில் ஊடகங்களுக்கு அவர் மேலும் குறிப்பிடுகையில்,

கடல் பிராந்தியங்களில் நிலவிவரும் மிக மோசமான காலநிலையால் ஏற்கனவே பல துரதிர்ஷ்டவசமான சம்பவங்கள் பதிவாகியுள்ளன. மூன்று மீனவர்கள் எதிர்பாராத விதமாக காணாமல் போயுள்ளனர். கடந்த 18ஆம் திகதி சிலாபம் பகுதியிலிருந்து ஒரு நாள் தொழிலுக்காகப் புறப்பட்டுச் சென்ற 'ஒ.எப்.ஆர்.பி-எ-2925 சி.எய்ச். டபிள்யூ' என்ற படகில் பயணித்த நிஹால் ரஞ்சன் பெர்னாண்டோ மற்றும் ஜூட் லக்ஷ்மன் பெர்னாண்டோ ஆகிய இரண்டு மீனவர்களும் இதுவரை கரை திரும்பவில்லை. இலங்கை விமானப்படை ஹெலிகாப்டர்களைக் கொண்டு தேடுதல் நடவடிக்கையை மேற்கொண்ட போதிலும், அவர்களைப் பற்றிய எந்த தகவலும் இதுவரை கிடைக்கவில்லை.

கடல் கொந்தளிப்பாக காணப்பட்டமையால் கடற்படை கப்பல்களை ஈடுபடுத்த முடியவில்லை. காலநிலை சீரானவுடன் இலங்கை கடற்படை தேடுதல் பணிகளை ஆரம்பிக்கத் தயாராக உள்ளது. அதேபோல் பேருவளை துறைமுகத்திலிருந்து கடந்த 15ஆம் திகதி புறப்பட்ட 'சுப பெத்தும்' (கே.எல்.டி 919) என்ற மீன்பிடிக் கப்பல், மோசமான காலநிலை காரணமாக 19ஆம் திகதி மீண்டும் துறைமுகத்துக்குத் திரும்பிக் கொண்டிருந்தபோது, எஸ். எம். சில்வா என்ற மீனவர் கடலில் தவறி விழுந்து காணாமல் போயுள்ளார். அவரைத் தேடும் பணிகள் நடைபெற்று வருகின்ற போதிலும் காணாமல் போயுள்ள நபரை இதுவரை மீட்க முடியவில்லை.

இவ்வாறான விபத்துக்களை தவிர்க்க உயிர் பாதுகாப்பு கவசங்களை அணிவது அவசியம். நீர்கொழும்பு பகுதியில் மீன்பிடிப் படகொன்று கவிழ்ந்து விபத்துக்குள்ளான போதிலும், அதில் பயணித்த இரண்டு மீனவர்களும் உயிர் பாதுகாப்புக் கவசங்களை முறையாக அணிந்திருந்தமையால் நீந்திக்கரை சேர்ந்து உயிர் தப்பியுள்ளனர். இந்தச் சம்பவம், உயிர் பாதுகாப்பு உபகரணங்களின் முக்கியத்துவத்தை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது. இவ்வாறான எச்சரிக்கைகளை புறக்கணிப்பதால் பல அனர்த்தங்கள் சம்பவிக்கின்றன.

வானிலை சீற்றம் காரணமாக மீனவர்களின் தொழிலுக்கு பாதிப்பு ஏற்படுவதால் அவர்களின் அன்றாட வருமானமும் பாதிக்கப்படுகிறது என்பதை நாம் அறிவோம். எனினும் உங்கள் உயிர்களுக்கும் உடமைகளுக்கும் பாதுகாப்பளிப்பதே எமது பிரதானக்கடமை. ஆகையால் மறு அறிவித்தல் வரும் வரை அபாயகரமான பகுதிகளில் மீன்பிடித் தொழிலில் ஈடுபடுவதைத் தவிர்க்குமாறும், ஏனைய பகுதிகளில் உள்ள மீனவர்களும் காலநிலை குறித்து தொடர்ந்து அவதானத்துடன் செயற்படுமாறும் கோரிக்கை விடுக்கிறேன் என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## இரு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உடனடியாகப் பொலிஸார் அந்த இடத்தில் குவிக்கப்பட்டனர். அவர்கள் மீது கற்கள் வீசப்பட்டதை அடுத்து, அவர்கள் எச்சரிக்கைத் துப்பாக்கிச் சூடு நடத்தினர். அத்துடன் கைகளில் கிடைத்த தடிகள், பொல்லுகளுடன் மக்களை வீடுகளுக்கு விரட்டினர். இரவு வரை பதற்றம் தொடர்ந்ததால் விசேட அதிரடிப் படையினர் மேலதிகமாக அந்தப் பகுதிக்கு வரவழைக்கப்பட்டு பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டிருந்தது.

தனிநபர்கள் இருவரிடையேயான கருத்து முரண்பாடு வளர்ந்து இரு பகுதியினருக்கு இடையிலான மோதலாக மாறியதாகப் பொலிஸார் தெரிவித்தனர். இரு தனி நபர்களுக்கும் இடையிலான பிரச்சினை சனிக்கிழமை பொலிஸ் நிலையம் வரை சென்று தீர்க்கப்பட்டிருந்தது. ஆனால், ஞாயிற்றுக்கிழமைமீண்டும்இந்தப்பிரச்சினை வளர்ந்து இரண்டு தனிநபர்களுக்கும் சார்பானவர்களும் சேர்ந்து இரு பிரிவுகளாக மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

இதன்போது மோட்டார் சைக்கிள் ஒன்றுக்கு தீ வைத்து எரிக்கப்பட்டதுடன் மற்றுமொரு மோட்டார் சைக்கிள் அடித்து நொருக்கப்பட்டுள்ளது.

சம்பவம் தொடர்பில் அறிந்து சம்பவ இடத்திற்கு விரைந்த வட்டுக்கோட்டை பொலிஸார் மீது கல் வீச்சு தாக்குதல் மேற்கொள்ளப்பட்டதை அடுத்து பொலிஸார் எச்சரிக்கை வேட்டுக்களைத் தீர்த்தனர்.

அத்துடன் வன்முறையில் ஈடுபட்டவர்கள் என்றசந்தேகத்தில்மூவரைகைதுசெய்தனர். மேலும் பலரைத் தேடி வருகின்றனர்.

## ஆடை, இறப்பர் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

44 வீதமாக அதிகரிக்கப்பட்ட வரி வரியை 30 வீதமாக குறைத்துக்கொள்ள எங்களுக்கு முடியுமாகியுள்ளபோதும் அது போதுமானதல்ல. அதனால் இந்த வரி அதிகரிப்பை மேலும் குறைத்துக்கொள்ள தேவையான பேச்சுவார்த்தைகளை நாங்கள் ஆரம்பித்திருக்கிறோம்.

நாட்டின் இறப்பர் உற்பத்தியில் நூற்றுக்கு மூன்றில் ஒரு பகுதியை அமெரிக்காவுக்கே ஏற்றுமதி செய்கிறோம். அதனால் எங்களுக்கு வருடத்துக்கு 330 மில்லியன் டொலர் வருமானம் கிடைக்கிறது. இந்த வரி அதிகரிப்பால் இந்த வருமானத்தில் சற்று பாதிப்பு ஏற்படும். என்றாலும் இந்த பாதிப்பை கட்டுப்படுத்திக்கொள்ள நாங்கள் பல்வேறு வழிகளில் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறோம். அமெரிக்காவுக்கு தாய்லாந்து, இந்துனேசியா போன்ற நாடுகளும் இறப்பர் ஏற்றுமதி செய்து வருகின்றன.

ஆனால் அமெரிக்காவின் வரி விதிப்பில் இந்த இரண்டு நாடுகளையும் விட எமக்கு குறைவாகும். அதனால் இந்த சந்தர்ப்பத்தில் எமது பொருட்களுக்கு பாதிப்பு ஏற்படாது. ஆனால் எங்களுக்கு விதிக்கப்பட்டுள்ள 30 வீத வரியைவிட வியட்னாம் போன்ற நாடுகளுக்கு குறைவாகவே வரி விதிக்கப்பட்டிருக்கிறது. அவ்வாறான சந்தர்ப்பங்களில் எங்களுக்கு பாதிப்பு ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. அதனால் எமது தொழிற்சாலைகளுக்கு ஏற்படும் பாதிப்பை எவ்வாறு குறைத்துக்கொள்ள முடியும் என்பது தொடர்பில் நாங்கள் பல்வேறு வழிகளில் கலந்துரையாடி வருகிறோம்.

குறிப்பாக அமெரிக்க வரி அதிகரிப்பால் பாதிக்கப்படும் எமது தொழிற்சாலைகளை பாதுகாக்கும் பா ருட்டு மாற்று வழிகளாக அமெரிக்காஅல்லாதவேறுநாடுகளின்சந்தைகள் தொடர்பில் ஆராய்ந்து வருகிறோம். அதனால் இந்த வரி அதிகரிப்பால் அழுத்தங்களுக்கு உள்ளாகியுள்ள தொழிற்சாலைகளை பாதுகாக்க தேவையான நடவடிக்கைகளை நாங்கள் மேற்கொண்டு வருகிறோம் என்பதை அந்த துறைசார்ந்தவர்களுக்கு தெரிவித்துக்கொள்கிறோம் என்றார்.

## நாளை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஒதுக்கப்பட்டுள்ளது. இதனையடுத்து 10.00 மணி முதல் 11.00 மணிவரை வாய்மூல விடைக்கான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 11.00 மணி முதல் 11.30 மணிவரை நிலையியற் கட்டளை 27(2)ன் கீழான கேள்விக்காக ஒதுக்கப்பட்டுள்ளது.

அதன்பிரகாரம் நாளை 22ஆம் திகதி செவ்வாய்க்கிழமை 11.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் (2005ஆம் ஆண்டின் 36ஆம் இலக்க சட்டத்தைத் திருத்துவதற்கானது), வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலம் (2016ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க சட்டத்தைத் திருத்துவதற்கானது) மற்றும் சேவையாளர்களின் தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் ஆகியவை மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்தை நடத்துவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தேசிய குறைந்தபட்ச வேதனம் (திருத்தச்) சட்டமூலம் மற்றும் வேலையாட்களின் வரவுசெலவுத்திட்ட நிவாரணப்படி (திருத்தச்) சட்டமூலங்கள் இரண்டு ஆகியவற்றுக்கு எதிராக உயர்நீதிமன்றம் வழங்கிய தீர்ப்புக்கு அமைய மூன்று சட்டமூலங்களும்விசேடபெரும்பான்மையுடன் நிறைவேற்றப்படவிருப்பதாக செயலாளர் நாயகம் குறிப்பிட்டார். இதன் பின்னர் 5.00 மணி முதல் 6.00மணி வரை எதிர்க்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்பு பிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.

மறுநாள் 23ஆம் திகதி புதன்கிழமை 11.30 மணி முதல் 5.00 மணி வரை கம்பெனிகள் (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 5.00 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

எதிவரும் 24ஆம் திகதி வியாழக்கிழமை 11.30 மணி முதல் 5.00 மணி வரை இலங்கை மின்சாரம் (திருத்தச்) சட்டமூலம் மீதான இரண்டாவது மதிப்பீட்டு விவாதத்திற்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது. இதனைத் தொடர்ந்து 5.00 மணி முதல் 5.30 மணி வரை ஆளும்கட்சியினால் கொண்டுவரப்படும் ஒத்திவைப்புவேளையின்போதானபிரேரணை மீதான விவாதம் இடம்பெறவுள்ளது.மறுநாள் 25ஆம் திகதி வெள்ளிக்கிழமை 11.30 மணி முதல்5.00மணிவரைமறைந்தநாடாளுமன்ற உறுப்பினர்களான இரா.சம்பந்தன், அபேரத்ன பண்டார ஹேரத் பிலபிட்டிய, டபிள்யூ.பி.ஏக்கநாயக்க, லக்கி ஜயவர்தன மற்றும் மாலினி பொன்சேகா ஆகியோர் தொடர்பான அனுதாபப் பிரேரணை எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

இதனைத் தொடர்ந்து 5.00 மணி முதல் 5.30 மணி வரை சபை ஒத்திவைப்பு நேரத்தின் போதான கேள்விகளுக்காக நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

## சர்வதேச....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உறவுகளின் சங்கத்தின் பிரதிநிதிகள், யாழ். பல்கலைக்கழக சமூகத்தினர் உள்ளிட்ட பலரும் பங்கேற்றிருந்தனர்.

இந்தச்சந்திப்பசம்பந்தமாகதமிழ்த்தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தெரிவித்ததாவது:

பொறுப்புக்கூறல் என்பது மிகப்பெரிய கேள்விக்குறியாக மாறியுள்ளது உங்களிற்கு தெரியும். ஐநாவின் மனித உரிமை ஆணையாளர் இலங்கைக்கு வருகை தரவுள்ளார் என்று கிட்டத்தட்ட இரண்டு மாதங்களிற்கு முன்னரே எங்களிற்கு அறிவித்திருந்தார்கள். அவரது வருகைக்கு ஒரு நோக்கம் இருப்பதாக எங்களிற்கு சொல்லப்பட்டிருந்தது.

அப்படி சொல்லப்பட்ட நிலைமையில் வடகிழக்கை சேர்ந்த மனித உரிமை அமைப்புகள் ஐநா மனித உரிமைகள் ஆணையாளரின் அலுவலகத்திற்கு கடிதமொன்றை அனுப்பி வைத்திருந்தன. செப்டம்பர் ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையின் அமர்வு முடிவடையும் வரை இங்கே வராதீர்கள் என அவர்கள் அந்த கடிதத்தில் வேண்டுகோள் விடுத்திருந்தனர்.

அதற்கு முதல் இங்கு ஆணையைர் வந்தால் ஆளும்தரப்பு அந்தச் சந்தர்ப்பத்தை பயன்படுத்தி நீங்கள் கேட்க விரும்புகின்ற அத்தனை வாக்குறுதிகளையும் நிறைவேற்றுவதாக வாக்குறுதியளித்து செம்டம்பர்மாதம்வரப்போகின்றதீர்மானத்தை எந்தளவிற்கு பலவீனப்படுத்த முடியுமோ அந்தளவிற்குப் பலவீனப்படுத்துவதற்கான முழு முயற்சியையும் செய்யும். இறுதியில் அந்தத் தீர்மானம் பலவீனப்பட்ட பிறகு பாதிக்கப்பட்ட மக்களிற்கு அதிலிருந்து மீள முடியாத நிலையை ஏற்படுத்தும் எனக் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

தெற்கில் இருக்கின்ற சுமார் 100 மனித உரிமை அமைப்புகளும் அவசரமாக நீங்கள் வராதீர்கள் என அவரிடம் கோரிக்கை விடுத்திருந்தன. அவை எல்லாவற்றையும் மீறித்தான் ஆணையாளர் வருகின்றார், அந்த ஆணையாளர் வந்தபோது ,துரதிஸ்டவசமாக என்னால் இங்கே இருக்க முடியாத ஒரு காலம்.

2021ஆம் ஆண்டு ஜனவரி 15ஆம் திகதி ஒரு பொதுக் கடிதத்தை தமிழ் கட்சிகள் மனித உரிமை அமைப்புகள் செயற்பாட்டாளர்கள் ஒன்றிணைந்து அனுப்பியிருந்தோம்.

பொறுப்புக்கூறல் தொடர்பிலே தமிழ் மக்கள் எதிர்பார்க்கின்ற விடயங்கள் -நான்கு அம்சக் கோரிக்கைகளை முன்வைத்து நாங்கள் கடிதமொன்றை அனுப்பியிருந்தோம். அந்த கடிதத்தில் அவ்வேளை தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவராயிருந்த சம்பந்தன் அவர்களும் கையெழுத்திட்டிருந்தார்.

மனித உரிமை விடயத்தில் உறுதியாக இணைந்து பயணிக்கின்ற அமைப்புகளும் கைச்சாத்திட்ட கடிதம். நீங்கள் பார்த்தீர்கள் என்றால் அந்த கடிதம் ,இன்றும் மிகவும் பொருத்தமானஒருகடிதம். உண்மையிலேயே தமிழ் மக்களின் பொறுப்புக்கூறல் விடயம் 100க்கு நூறு வீதமாக நாங்கள் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு கடிதமாக அது காணப்படுகின்றது.

நாங்கள் அந்தக் கடிதத்தை மீண்டும் வலியுறுத்தவேண்டும் என விரும்பியதால் நாங்கள் அந்த முயற்சியையும் மேற்கொண்டு வெற்றியையும் அடைந்தோம். அனைத்து தரப்புகளும் அந்தக் கடிதத்தி;ல் கையெழுத்திட்டன. மனித உரிமை ஆணையாளர் யாழ்ப்பாணத்திற்கு வந்தபோது இங்கேயிருக்கின்ற அமைப்புகளைச் சந்தித்த இடத்தில்,தமிழ் சிவில் சமூக அமையத்தின் சார்பாக அந்தக்கடிதம் அவரிடம் வழங்கப்பட்டது.

அந்தக்கடிதத்தை நாங்கள் வழங்கியபோது செம்மணியையும் உள்வாங்கித்தான் அதனைக் கொடுத்திருந்தோம். தற்போது இருக்கின்ற சூழல் பொறுப்புக்கூறல் படிப்படியாக குறைந்து பேச்சுபொருளாக மாறிவிட்ட சூழல்.

போர்க் காலத்தில் இடம்பெற்ற இனப்படுகொலை தொடர்பான முயற்சிகள் பூஜ்ஜியத்திற்குவருகின்றஇடத்திற்குபடிப்படியாக குறைத்துக்கொண்டுவந்துவிட்டினம். அதனை இன்று ஒரு பேச்சுப்பொருளாகக்கூட இல்லாத அளவிற்குப் பலவீனப்படுத்தியுள்ளார்கள்.

கடந்ததீர்மானம் உள்ளகவிசாரணையை வலியுறுத்துகின்றது ஆளும்தரப்பை விசாரணை முன்னெடுக்க சொல்லிக் கேட்கின்றது. அப்படிப்பட்ட ஒரு நிலையில் அதுவும் அந்தத் தீர்மானத்தை நீங்கள் பார்த்தீர்கள் என்றால் போரின் கடைசிக் கட்டத்தில் ,இடம்பெற்ற விடயங்களை விசாரணை செய்யவேண்டும் என்பதுதான் 2012 முதல் இந்தத் தீர்மானங்களின் குறிக்கோளாக உள்ளது.

செம்மணிபோர்நடைபெற்றகாலத்தில்தான் இடம்பெற்றது. ஆனால் இந்தத் தீர்மானம் விரும்புகின்றஅந்தக்காலப்பகுதிக்குவெளியே. புதுதீர்மானம் செப்டம்பரில் வருகின்றது, செம்மணி எப்போதோ மறைக்கப்பட்ட ஒரு விடயம், வெறுமனே 15 உடல்களை கண்டுபிடித்த இடத்தில் அதன் பின்னர் ஆளும்தரப்பு விசாரணைக்கான எந்தவொரு முயற்சியையும் எடுக்கவில்லை.

வெளிவிவகார அமைச்சராக லக்ஸ்மன் கதிர்காமர் இருந்தவேளை இது ஒரு பொய், மனித புதைகுழிகள் இல்லை, குற்றவாளியொருவர் குற்றவாளியாக நிரூபிக்கப்பட்ட இடத்தில கோபத்தில எல்லா பழிகளையும் ஆளும்தரப்பின் மீது போட விரும்பினநிலையில்தான் அந்தவாக்குமூலம் இருந்ததே தவிர வேறு எதுவும் இல்லை எனத் தெரிவித்துமுழுமையாகமூடினார்கள். அதனை கிடப்பில் போடுவதற்குத்தான் அவர்களின் முழுமுயற்சியும் இருந்தது.

சந்திரிகாவின் ஆளும்தரப்பு மாத்திரமல்ல அதற்கு பிறகு வந்த ரணில் விக்கிரமசிங்க ஆளும்தரப்பும் இவை எவற்றையும் எடுத்துப் பார்க்க விரும்பவில்லை, இவ்வாறான சூழ்நிலையில் மகிந்த ஆளும்தரப்பைப் பற்றி நாங்கள் சொல்லவேண்டியதில்லை.

செம்மணி பொய், 600 உடல்களே கொல்லப்பட்டு புதைக்கப்படவில்லை என சொல்லப்பட்டு ஒரு முடிவாகயிருந்த நிலையில்தான், செம்மணியின் இந்தக் கண்டுபிடிப்பு இடம்பெற்றுள்ளது. செம்மணி எங்களிற்கு இரண்டு சந்தர்ப்பங்களைத் தருகின்றது,

ஒன்று ஜெனீவாவில் இருக்கின்ற சமூகம் அதனை கொச்சைப்படுத்தி முடக்குகின்ற கடைசிக் கட்டத்தை மாத்திரம் விசாரிக்க சொல்கின்ற அந்த முயற்சியை கேள்விக்குட்படுத்தி, அது விரும்பியளவிற்கு பின்னிற்கு சென்று மக்களிற்கு நடந்திருக்கக் கூடிய அநியாயங்களை விசாரிக்கக்கூடிய காலவரையறையை நீடிக்கவேண்டும் என்ற நிலமையை உயிர்கொடுக்கின்ற ஒரு சந்தர்ப்பமாகயிருக்கின்றது.

இரண்டாவது விடயம் செம்மணி இந்தளவிற்கு வந்திருப்பதன் உடன் வேறு வேறு இடங்களில் மனிதப் புதைகுழிகள் கண்டுபிடிக்கப்பட்டுள்ள நிலையில் இது இனப்படுகொலைக்கான சூழலை மீண்டும் திறக்க வைத்து விசாரணை செய்வதற்குரிய சந்தர்ப்பத்தையும் ஏற்படுத்துகின்றது.

அதாவது நடந்தது இரண்டுதரப்புகளிற்கும் இடையிலான ஒரு போர் அல்ல, இதற்குப் பின்னால் ஒரு சரித்திரம் உள்ளது, தமிழ் மக்களிற்கு நடந்த அநியாயங்களைச் சரியாகப் பார்த்தால் அது இறுதியில் தமிழ் மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாக்க ஆயுதமேந்தவேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டார்கள் என்ற எல்லா விடயத்தையும் உள்வாங்கி, யார் என்ன செய்தார்கள் என்பதைப் பார்ப்பதுதான். எங்களிற்குக்கூடத் தேவைப்படுகின்றது.

அப்போதுதான்எங்களிற்குஉண்மையான நீதியும் நியாயமும் கிடைக்கும். இல்லாவிடில் ஒரு சரித்திரத்தை மாத்திரம் மூடிமறைத்துவிட்டு ஒரு பக்கத்தை மாத்திரம் படமெடுத்துவிட்டு நீங்கள் இதற்குரிய தீர்வை கொண்டுவாருங்கள் என கேட்பது நியாயத்தைகொண்டுவரப்போவதில்லை.

செம்மணி எங்களிற்கு அந்தக் கதவையும் திறக்கவைத்துள்ளது. ஆகவே இன்று எங்களிற்கு உள்ள தேவை என்னவென்றால், இந்த முழு விடயத்தையும் ஒருங்கிணைத்த நிலைப்பாட்டை வலியுறுத்துவதே.

செம்மணியைப் பிரித்து போர்க் காலத்தில் இடம்பெற்ற விடயங்களைப் பிரித்து வைப்பது பாதிக்கப்பட்ட மக்களிற்கு மிகப்பெரும் பின்னடைவைஏற்படுத்தும். இது ஆபத்தானது. ஏனென்றால் இலங்கையில் சட்டமா அதிபர் திணைக்களம் ஆளும்தரப்பிற்குரிய சட்டத்தரணியாகச் செயற்படுகின்றது. ஆளும்தரப்பிற்கு எதிராக எதுவும் வந்தாலும் அவர்கள்தான் நீதிமன்றம் போவார்கள், அதேவேளைஅவர்கள்தான்குற்றவாளிகளிற்கு எதிராகவழக்குகளையும்தாக்கல்செய்வார்கள். அரசதரப்பில்இருக்கின்றபிழைசெய்தவர்களிற்கு எதிராகவும் அவர்கள்தான் வழக்கைத் தாக்கல் செய்வார்கள்.

இதனை நிவர்த்தி செய்யவேண்டும் என்பது இலங்கையின் சட்டத்துறையின் ஒரு பொதுப்பிரச்சினை. அந்த பொதுப்பிரச்சினைக்குரிய தீர்வு ஒரு சுயாதீன வழக்குத் தொடுநர் அலுவலகம். அதற்கும் போர்க் இலங்கையில் நடந்த அநியாயத்திற்கும் இடையில் எந்த தொடர்பும் இல்லை. அவ்வாறான சுயாதீன அலுவலகம் உருவாக்கப்பட்டாலும் அதன் ஊடாக இனப்பிரச்சினை சார்ந்த விடயங்களிற்குத் தீர்வு கிடைக்கப்போவதில்லை.

இலங்கையில் இருக்ககூடிய இனப்பிரச்சினைஇனங்களிற்குள்இருக்ககூடிய பிரச்சினை, அந்த இனங்கள் என பார்க்கின்ற போது இலங்கை அரசு என்பது ஒரு இனத்தின் சொத்தாகமாறியுள்ளது. ஏனைய இனங்களிற்கு எதிராக ஒட்டுமொத்த இலங்கை அரசின் கட்டமைப்பேமாறியிருக்கின்றதுஎன்றகருத்தை முன்னாள்ஐநாமனிதஉரிமைஆணையாளர் இளவரசர் செய்ட் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருந்தார். ஓர் உள்ளக விசாரணை இலங்கையிலே பொருத்தமே இல்லாதது என்பதையும் அதனடிப்படையிலேயே அவர் தெரிவித்திருந்தார்.

இலங்கைக்கு உள்ளே அந்த இனப்பிரச்சினையின் தாக்கம் ஒட்டுமொத்த அரச இயந்திரத்தையே நடுநிலைத் தன்மை இழக்க வைத்திருக்கின்றது என்பதும் ஒருபோதும் ஒரு உள்ளக விசாரணை ஊடாக இனப்பிரச்சினை சார்ந்த குற்றங்களிற்கு ஒரு தீர்வு கிடைக்காது என்பதும் வெளிப்படையானது. ஆகவே ஆகக்குறைந்தது ஒரு கலப்புப் பொறிமுறையாவது உருவாக்கப்படவேண்டும் , சர்வதேச விசாரணைதான் மிகப்பொருத்தம் ஆனால் ஆகக்குறைந்ததுஒருகலப்புபொறிமுறையாவது உருவாக்கப்படவேண்டும் எனச் சொன்னார்.

அதற்கு ஒரு விட்டுக்கொடுப்பாக நாங்கள், தமிழ் தரப்பு தெரிவித்தது கலப்புப் பொறிமுறையின் முழுக்கட்டுப்பாடும் சர்வதேச தரப்பிடம்இருந்தால்தான்கலப்புபொறிமுஷயை நாங்கள் பரிசீலிப்போம் என்பதுதான். இதுதான் எங்களின் நிலைப்பாடாக இருந்தது.

இன்றைக்கு திட்டமிட்ட வகையிலே சுயாதீன வழக்குத்தொடுநர் அலுவலம் ஒன்று தேவை என்ற விடயத்தை வைத்துக்கொண்டு தமிழர்களுடைய விடயத்திற்கு தீர்வாக அதனை முன்னிறுத்துவதற்கான முயற்சிகள் இடம்பெறுகின்றன - என்றார்.

காலைக்கதிர் Kalaikkathir

## நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

# புதிய கல்விச் சீர்திருத்தத்தில் தமிழரின் பங்களிப்பு எங்கே?

**இலங்கையின்கல்வித்துறையில்பலஆண்டுகளாகவே நிலவிய பின்னடைவைப் பரிசீலித்து, அதனை சரிசெய்யும் வகையில் புதிய கல்விச் சீர்திருத்தங்கள் மேற்கொள்ளப்படுவது ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றமாகும். நாட்டின் எதிர்காலமான மாணவர்கள் புதிய யுகத்திற்கேற்ப அறிவியல், தொழில்நுட்பம், மொழி திறன், சமூக அறிவு ஆகியவற்றில் திறமையுடன் உருவாக வேண்டும் என்பதற்காக இந்த மாற்றங்கள் அத்தியாவசியமாகவே இருக்கின்றன. இத்தகவல்களின் அடிப்படையில், அடுத்த ஆண்டு தை மாதம் (2026 ஜனவரி) முதல் புதிய கல்வி திட்டம் நடைமுறைக்கு வரவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இந்தத் திட்டத்துக்கான சட்ட முன்மொழிவுகள் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள நிலையில், தென் பகுதியில் பல சிங்கள எதிர்க்கட்சிகள் கடுமையான விமர்சனங்களை முன்வைத்து வருகின்றன. அந்த விமர்சனங்களில் பாடத்திட்டத்தின் உள்ளடக்கம், கல்வி மையங்களின் அமைப்பு, ஆசிரியர் நியமனங்கள் மற்றும் கல்வி சுதந்திரம் ஆகியவை முக்கியமாக சுட்டிக்காட்டப்படுகின்றன. இது ஒட்டுமொத்தமாக ஒரு சிந்தனையை ஏற்படுத்துகிறது இத்தனை பரபரப்பான மாற்றங்கள் முன்னெடுக்கப்படும் போது, வடக்கில் இருந்து எதுவும் பேசப்படவில்லையே!**

**கல்வி என்பது எதார்த்தமாகப் பார்க்கும்போது ஒரு தேசிய விடயம்தான். ஆனால் இலங்கையின் பன்முகத்தன்மை கொண்ட சமூக அமைப்பில், கல்வியில் ஒவ்வொரு இனத்திற்கும் உள்ள தேவைகள் மற்றும் அவர்களது மொழி, வரலாறு, பண்பாட்டு அடையாளங்கள் என்பவற்றும் நுட்பமாக கவனிக்கப்படவேண்டும். இது தமிழ் சமூகத்திற்கும் மிக முக்கியம். நீண்ட காலமாகவே தமிழர் தரப்பில் இருந்து 'தமிழ்மொழி' மற்றும் 'தமிழர் வரலாறு' பாடங்கள் இடமில்லாமல் போய்வருவதைப் பற்றிய ஆழமான கவலைகள் இருந்து வருகின்றன.**

**இந்தக் காலகட்டத்தில், நாடு முழுவதும் கல்வி மாற்றத்தை நோக்கிச் செல்லும் வேளையில், தமிழ் அரசியல் கட்சிகளும் தமிழ் அறிவுஜீவிகளும் மிகக் குறைவாகவே பகிர்வுகளில் ஈடுபட்டுள்ளனர். கருத்துக்களைமுன்வைக்கும்எண்ணமும், வியாபாரமும் இல்லாமல் உள்ளமை வெறும் புறக்கணிப்பு அல்ல; அது எதிர்காலம் மீது பாவஞ்செய்யும் அலட்சியம் கூட ஆகலாம். அரசாங்கம் மேற்கொள்வதற்காக உள்ள கல்விச் சீர்திருத்தங்களில் பங்கு பெற தமிழர்களுக்கு உரிமை மட்டும் அல்ல, கடமையும் ஆகும்.**

**'முன்னே உரையாடாதபோது பின்பு கத்திக் கொண்டு என்ன பயன்?' என்பது ஒரு பழமொழி போலத் தோன்றலாம். ஆனால் அதே உண்மை இங்கு பொருந்துகிறது. கல்வி என்ற பிரமாண்டமான மாற்றச் சூழலில், தமிழ் சமூகத்தின் உரிமைகள் மற்றும் அடையாளங்களை உறுதிப்படுத்த இதுவே மிகச் சிறந்த நேரம். இந்த நேரத்தில் தமிழர் அரசியல் இயக்கங்கள், கல்வி விஞ்ஞானிகள், ஆசிரியர்கள் மற்றும் பெற்றோர் மத்தியில் ஒரு பரந்த அளவிலான கலந்துரையாடலை ஏற்படுத்தவேண்டும்.**

**நாளைய தலைமுறையினருக்கான கல்வி இன்று வடிவமைக்கப்படுகிறது. அது தமிழ் மாணவர்கள் விடுபடக்கூடிய ஒரு வாய்ப்பாக இருக்கக்கூடாது. அதனை ஒரு உரிமையாகக் கொண்டாட தமிழர் சமூகமே விழிப்புணர்ச்சியுடன் செயல்படவேண்டும். இன்று அமைதியாக இருப்பது, நாளை நம்மையே வலிக்கவைக்கும்.**

# காணாமலாக்கப்பட்டோர் உறவுகள் சங்கத்திற்கு புதிய தலைவர்கள் தெரிவு

காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளின் சங்கத்தின் நிர்வாகத் தெரிவும் கலந்துரையாடலும் நேற்று யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றது.

வலிந்து காணப்பட்ட உறவுகள் தமது உறவுகளை தேடும் போராட்டத்தினை தொடர்ந்து முன்னெடுப்பதை நோக்கமாகக் கொண்டு எட்டு மாவட்டங்களைச் சேர்ந்த காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் தமது சங்கங்களின் தலைவர் செயலாளர் உள்ளிட்டோரை நேற்றுத் தெரிவுசெய்தனர்.

இதன் போது வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின்உறவுகள்சங்கத்தின்வடக்கு கிழக்கின் தலைவியாக கனகரஞ்சினியும், செயலாளராக ஜெனிற்றாவும் தெரிவு செய்யப்பட்டனர்.

காணாமல் ஆக்கப்பட்டோர் சங்கத்தின் யாழ்ப்பாண மாவட்ட தலைவராக இளங்கோதை, மட்டக்களப்பு மாவட்ட தலைவியாக அமலநாயகி, அம்பாறை மாவட்ட தலைவியாக செல்வராணி, திருகோணமலை மாவட்ட தலைவியாக செபஸ்ரியான்தேவி, வவுனியா மாவட்ட தலைவியாக ஜெனிற்ரா, முல்லைத்தீவு மாவட்ட தலைவியாக வீரமணி, கிளிநொச்சி மாவட்டத் தலைவியாக கோகிலவாணி, மன்னார் மாவட்ட தலைவியாக திருமதி உதயசந்திரன் ஆகியோர் தெரிவு செய்யப்பட்டனர்

### உயிர்த்த ஞாயிறு தாக்குதலை தடுக்கத் தவறிய

# முன்னாள் பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்த்தன சேவை நீக்கம்



உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில் அப்போதைய தேசிய உளவுச்சேவையின் முன்னாள் பணிப்பாளராக இருந்து தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் அலட்சிய போக்குடன் செயற்பட்டமை தொடர்பில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்ட சிரேஷ்ட பிரதி பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தன உடன் அமுலாகும் வகையில் பொலிஸ் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளார்.

நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணையில் அனைத்து குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டமையால் அவர் சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

2019 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 21ஆம் திகதி உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதல் இடம்பெற்ற சந்தர்ப்பத்தில்

தேசியஉளவுச்சேவையின்பணிப்பாளராக சிரேட பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிலந்த ஜயவர்தனவே செயற்பட்டிருந்தார்.

எவ்வாறாயினும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல் இடம்பெறுவதற்கு முன்னர் ஏப்ரல் மாதம் 4 ஆம் திகதி புலனாய்வுத் தகவல் கிடைத்திருந்த போதிலும் அது தொடர்பில் உரிய விசாரணை மேற்கொண்டு தாக்குதலை தடுப்பதற்கு நடவடிக்கை எடுக்காமை தொடர்பில் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு நிலந்த ஜயவர்தனவக்கு எதிராக நடவடிக்கைகளை எடுக்குமாறு தெரிவித்து சில பரிந்துரைகளை முன்வைத்திருந்தது.

குறிப்பாக தாக்குதல் தொடர்பில் தகவல் கிடைக்கப்பெற்றிருந்த போதிலும் அப்போதைய தேசிய உளவுச்சேவையின் பிரதானியாக செயற்பட்ட நிலந்த ஜயவர்தன, அதனைத் தடுக்க எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை எனவும் அந்துப் புலனாய்வு தகவலை பாராதூரமான விடயமாக கருதாமல் வேண்டுமென்றே புறக்கணித்துள்ளதாகவும் ஜனாதிபதி விசாரணை ஆணைக்குழு அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டது.

இந்தத் தாக்குதல் தொடர்பில் நிலந்த ஜயவர்தனவும் பொறுப்பு கூற வேண்டும் எனவும் இதற்கமைய அவருக்கு எதிராக குற்றவியல் தண்டணைகோவை சட்டத்திற்கு அமைய குற்றவியல் வழக்கு தொடர வேண்டும் எனவும் அந்த பரிந்துரைகளில் குறிப்பிடப்பட்டது.

மேலும் உயிர்த்த ஞாயிறு தினத்தாக்குதல் தொடர்பில் உயர்நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டுள்ள 13 அடிப்படை உரிமை மீறல் மனுக்கள் தொடர்பில் அளிக்கப்பட்ட தீர்ப்பில் தாக்குதலின் போது பாதிக்கப்பட்ட தரப்பினருக்கு தனது சொந்த நிதியிலிருந்து 75 மில்லியன் ரூபா இழப்பீட்டை வழங்குமாறு நிலந்த ஜயவர்தனவுக்கு உயர்நீதிமன்றம் உத்தரவும் பிறப்பித்திருந்தது.ஷ

இந்த பின்னணியில் கடந்த 2023 ஆம் ஆண்டு அக்டோபர் மாதம் 26 ஆம் திகதி தேசிய பொலிஸ் ஆணைக்குழுவில் நிலந்த ஜயவர்தனவுக்கு எதிராக குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது.

இதனையடுத்து அவர் தொடர்பில் கடந்த 2024 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 21 ஆம் திகதி முறையான ஒழுக்காற்று விசாரணை மேற்கொள்ள தேசிய பொலிஸ் ஆணைக்குழு தீர்மானித்தது.

இதற்கமைய மேற்கொண்ட ஒழுக்காற்று தொடர்பிலான விசாரணைக் குழுவின் அறிக்கைதேசியபொலிஸ்ஆணைக்குழுவிற்கு கடந்த 4 ஆம் திகதி அனுப்பிவைக்கப்பட்டது.

அதற்கமைய முன்னெடுக்கப்பட்ட ஒழுக்காற்று விசாரணையில் அனைத்து குற்றச்சாட்டுகளிலும் குற்றவாளியாக அடையாளம் காணப்பட்டமையால் நிலந்த ஜயவர்தன சேவையில் இருந்து நீக்கப்பட்டுள்ளதாக தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின்தலைவர்லலித்ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.




# ஈரானை துவம்சம் செய்த மொசாட்டின் வேவு அழகி- கேத்ரின் பெரெஸ் ஷேக்ட்

**ஐங்கரன் விக்கினேஸ்வரா**

உளவுத்துறை உலகில், ட்ரோன்கள், செயற்கைக் கோள்கள் மற்றும் சைபர் கருவிகள் உள்ளன. ஆனால் பல சமயங்களில் பெண்களும் உளவுத்துறையில் மிக முக்கியமானவர்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளனர். சில நேரங்களில், மிகவும் ஆபத்தான ஆயுதமாக அவர்களே கருதப்பட்டுமுள்ளனர். இதுபோன்ற ஒரு பெண் இப்போது மத்திய கிழக்கு நாடுகளில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

**உயர்மட்ட ஈரானிய தொடர்பு:**

ஈரானை உள்ளிருந்து அதிர வைத்த மொசாட் முகவரான கேத்ரின் பெரெஸ் ஷேக்ட் (Kathrine Perez Sheked) பிறப்பால் பிரெஞ்சுக்காரர். இஸ்ரேலின் உயர்மட்ட உளவுத்துறை நிறுவனத்தால் நீண்ட பயிற்சி பெற்றவர். நவீன உளவு (Espionage) வரலாற்றில் மிகவும் துணிச்சலான பணிகளில் ஒன்றில் அவர் பணியமர்த்தப்பட்டார்.

இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு, மொசாட் தனது



'மிஷன் ஈரான்' (Mission Iran)ஐத் தொடங்கியது. அவர்களின் இலக்கு ஈரானின் இராணுவ உயரடுக்கு மற்றும் அணுசக்தி திட்டத்தில் ஊடுருவ வேண்டும். அதற்கு, அவர்களுக்கு ஒரு உளவாளியை விட அதிகமாக தேவைப்பட்டது, அழகிய வசீகரமான ஒருவர். அவரே கேத்ரின் ஆவார்.

மொசாட்டின் தீவிர பயிற்சிக்குப் பிறகு, அவர் ஒரு போலி அடையாளத்தின் கீழ் ஈரானுக்குள் நுழைந்தார். ஷியா இஸ்லாத்தில் அமைதியைக் கற்கும் ஒரு ஆன்மீக பெண்ணாக மாற்றிக் கொண்டார். அவர் உள்ளூர் பழக்கவழக்கங்கள், மொழி மற்றும் மத சடங்குகளை ஏற்றுக்கொண்டார். அவரது மாறுவேடம் சரியானதாக ஈரானில் இருந்தது. ஒவ்வொருவரும் அறியாமல் கேத்ரினை தங்கள் வீடுகளுக்குள் அனுமதித்தனர்.

முதற்கட்டமாக உயர்மட்ட ஈரானிய இராணுவ அதிகாரிகளின் மனைவிகளுடன் தொடர்புகளை ஏற்படுத்தினார். அவருடைய அன்பான குணமும் ஆர்வமும் அவர்களை வென்றது. தேநீர் விருந்துகள் , குடும்ப நிகழ்ச்சிகள் என அனைத்து இடங்களிலும் அவருக்கு மரியாதை அளிக்கப்பட்டது.

மேலும் இந்த அழைப்புகள் நட்புகளாக மாறியது. விரைவில், ஈரானின் மிகவும் சக்திவாய்ந்த மனிதர்களின் வீடுகளுக்குள் அவருக்கு அணுக இலகுவான வாய்ப்புகள் கிடைத்தன. அங்கிருந்த வண்ணமே அவரின் உளவு நடவடிக்கைகள் தொடங்கின.

**போர் அடித்தள வேவுப் பெண்:**

உயர்மட்ட ஈரானிய இராணுவ அதிகாரிகளின் வீடுகளுக்குள் அவர் சென்றபோது யாரும் அவரைச் சந்தேகிக்கவில்லை. பாதுகாப்பு அதிகாரிகள் தொலைபேசிகளை ஸ்கேன் செய்வதிலும் மின்னஞ்சல்களைக் கண்காணிப்பதிலும் மும்முரமாக இருந்தபோது, கேத்ரின் புன்னகையுடன் எல்லா இடங்களிலும் நழுவிச் சென்றார்.

புகைப்படங்கள், வரைபடங்கள் மற்றும் தனிப்பட்ட இராணுவ விவரங்களை சேகரித்தார். எல்லாவற்றையும் நேரடியாக மொசாட்டுக்கு அனுப்பினார். அவர் தரவுகளை மட்டும் சேகரிக்கவில்லை. ஆனால் அவர் போருக்கான அடித்தள வேவுப் பணியை அமைத்துக் கொடுத்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஜூன் 12, 2025 அன்று இரவு இராணுவ தளங்கள், இரகசியப் பதுங்கு குழிகள் மற்றும் அணு ஆராய்ச்சி மையங்களைக் குறிவைத்து இஸ்ரேல் இராணுவம் ஈரான் முழுவதும் ஒரு திடீர் வான்வழித் தாக்குதலை நடத்தியது. ஆனால் இவை சீரற்ற தாக்குதல்கள் அல்ல. ஒவ்வொரு தாக்குதலும் துல்லியமானதுடன் இலக்குத் தவறாமல் தாக்கப்பட்டன.

இஸ்ரேல் குறிவைத்த தாக்குதலில் கொல்லப்பட்டவர்களில் எட்டு உயர் இராணுவ ஜெனரல்கள், ஏழு மூத்த அணு விஞ்ஞானிகள், மூன்று உயர்மட்ட உளவுத்துறை தளபதிகள்.

இந்த அதிரடியான தாக்குதல்களால் ஈரான் திகைத்துப் போனது. அவர்கள் எதிர்வினையாற்றும் முன், அவர்களின் உயர்மட்டத் தலைமையில் பலரும் கொல்லப்பட்டுவிட்டனர். ஈரானின் பாதுகாப்பு அமைப்புகள் விசாரணையைத் தொடங்கியபோது, அவர்கள் இறுதியாக அவரைக் கண்டுபிடித்தனர்.


கண்டறியும் தொழில்நுட்பம் மூலம் அல்ல, ஆனால் குடும்ப நிகழ்வுகளின் போது எடுக்கப்பட்ட பழைய புகைப்படங்கள் மூலம் அவர் இனங் காணப்பட்டார். அந்தப் புகைப்படங்களில் கொல்லப்பட்ட ஈரானிய அதிகாரிகள் அருகே கேத்ரின் சிரித்துக் கொண்டிருந்தார்.

ஈரான் வரலாற்றில் அழிவுகரமான தாக்குதலுக்கு மூலகாரணமான அவர் யார் என்பதை ஈரானியர்கள் உணரும் நேரத்தில் அவர் மறைந்துவிட்டார். தெஹ்ரான் முழுவதும் அவர் முகத்தின் சுவரொட்டிகள் பரவின.

ஒரு பரபரப்பான கதை போல இராணுவ வட்டாரங்களில் அவருடைய பெயர் கிசுகிசுக்கப்பட்டது. ஆனால் அவர் மீள தன் தாயகம் போய்விட்டார். மலைகள் வழியாக அவர் தப்பிச் சென்றுவிட்டார் என்று சிலர் கூறுகிறார்கள். மொசாட் அவரை ஆழமான பணியில் ஈடுபடுத்தி வெற்றியும் பெற்றுள்ளார்கள்.

உண்மை எதுவாக இருந்தாலும் ஒன்று நிச்சயமாக சாதிக்கப்பட்டுள்ளது. கேத்ரின் பெரெஸ் ஷேக்ட் வீர தீர உளவு விளையாட்டில் வெற்றி பெற்றவராக இருக்கிறார்.

தோட்டாக்கள் இல்லாமல், குண்டுகள் இல்லாமல், அழகு, மூளை மற்றும் துணிச்சல் மட்டுமே அவரின் வெற்றியை தீர்மானித்துள்ளது. அத்துடன் ஈரானின்




மிகவும் பாதுகாக்கப்பட்ட இரகசியங்களை வெளியே வெளிப்படுத்தி இருக்கிறார்.

ஈரான் இதை 'அதன் வரலாற்றில் மிகவும் அழிவுகரமான மனித உளவுத்துறை மீறல்' என்று குறிப்பிடுகிறது. ஈரானுக்குள் நுழைந்து அதை உள்ளே இருந்து தகர்த்தெறிந்த இந்தப் பெண்ணை ஒருபோதும் மத்திய கிழக்கு மறக்காது.



வயலும் வயல்சார்ந்த இடமுமான 'மருதம்' நிலத்தில் பண்ணை வீட்டுடன் கூடிய செயற்திட்டம்


















இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.07.2025இல் வெளியிடப்பெற்றது